DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 68/2024

Prosecution witness PW - 9

| | | |
|---|---|---|
| Name | …. | சரவணன் |
| Father's Name | .... | சுந்தரமூர்த்தி |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 27th day of February 2026.

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது முனுகபட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சார்ந்தவர்கள். போலிசார் பிரேத பரிசோதனை செய்தபோது நான், நானும், ராமதாஸ், செல்ராஜ், மகேந்திரன் மற்றும் அருள்தாஸ் ஆகியோர் உடன் இருந்தோம். இவ்வழக்கு பற்றி வேறு தெரியாது.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி பெற்றதின் பேரில்)

கடந்த 04.03.2023 ஆம் மாலை சுமார் 6.00 மணிக்கு நெய்த பட்டு புடவையை வெங்கடேசன் வீட்டிற்கு கொடுப்பதற்காக சென்றபோது வெங்கடேசன் மற்றும் அவரது மகன்கள் ஜெகன், சுரேஷ் மற்றும் உறவினர் ஜெயவேல், ஜெயவேல் மகன் தரணி புடவையை வாங்கி சென்று தேவடியா பையா வாங்கின பணத்தை கொடுக்க வில்லை என்று, சுரேஷ் மகேஷ்வரன்வலது கன்ன்த்திலும், ஜெகன் மூக்கிலும், தரணி முதிகிலும் கைகளால் அடித்து செத்து போடா நாயா நீ ஏன் இன்னும் உயிருடன் இருக்கிறார் என்று அசிங்கமாக திட்டியதாகவும், தனக்கு அசிங்கமான மனஉளச்சலில் இருப்பதாகவும் மானம் போய்விட்டது என்றும், செத்துவிடலாம் என்று மகேஷ்வரன் தாய் வசந்தா,

மனைவி கலைவாணி ஆகியோரிடம் சொன்னதாகவும், சுமார் 7.30 மணியளவில் மாரியம்மன் கோயிலில் மகேஷ்வரன் உக்கார்ந்து இருந்ததாகவும், இரவு நேரமாகியும் வீடு திரும்பாததால் முக்கூட்டு சிவன் கோயில் மற்ற இடங்களில் தேடி பார்த்ததாகவும், நிலத்திற்கு நீர் பாய்ச்ச சென்று இருப்பான் என்று வீட்டிற்கு வசந்தா வந்துவிட்டதாகவும் எனக்கு தகவல் தெரியவந்தது. எங்கள் ஊரை சார்ந்த நடராஜன் மகன் லோகநாதன் என்பவர் 05.03.2023 அன்று காலை 7.00 மணியளவில் காலை கடன் கழிப்பதற்காக சென்னையை சேர்ந்த வரதராஜன் மகன் பத்மாநாபன் நிலத்தின் முள்வேலி அருகில் சென்றபோது ஒரு முள்வேலி மரத்தில் யாரோ உக்கார்ந்து இருப்பது போல் இருந்ததால் அந்த நபர் மீது எனக்கு சந்தேகம் ஏற்பட்டு, நான் ரோட்டிற்கு வரும்போது தனக்கு வரும்போது எங்கள் ஊரைச் சாந்த வசந்தா அவரது மகனை காணவில்லை என்று சொல்லவே லோகநாதன் முள்வேலியில் பார்த்ததை நான் வசந்தாவிடம் சொல்லியுள்ளேன். வசந்தாவும் லோகநாதனும் சென்று பார்த்தபோது மாடு மேய்க பயன்படும் கயிற்றை கொண்டு மகேஷ்வரன் தூக்கு போட்டு தற்கொலை செய்துகொண்டார். வசந்தா சத்தம்போட்டு கத்தவே அக்கம்பக்கத்தினர் வசந்தாவின் மருமகள் கலைவாணியிடம் எங்கள் உறவினர் ராமதாஸ், எங்கள் ஊரை சார்ந்த கோவிந்தராஸ் மகேஷ்வரன் உடலை மரத்தில் இருந்து கீழே இறக்கி வைத்தனர். மகேஷ்வரனை அசிங்கமாக திட்டி மன உளச்சலை ஏற்படுத்தி தற்கொலை செய்து கொள்ள தூண்டிய ஜெகன், சுரேஷ், தரணி மற்றும் வெங்கடேசன் ஆகியோர் நடவடிக்கை எடுக்கும்மாறு கலைவாணி பெரணமல்லூர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க போலிசார் வழக்கு பதிவு செய்ததாக தெரியவந்தது. இறந்த மகேஷ்வரன் பிரேத்தை பிரேத பரிசோதனை செய்த போது நானும், சரவணன், செல்ராஜ், மகேந்திரம் மற்றும் அருள்தாஸ் ஆகியோர் உடன் இருந்தோம். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். தற்போது நான் உண்மைகளை மறைத்து எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court and read over / interpreted to the witness in the presence of the accused and admitted by him / her to be correct.

Sd/- N.Suresh
**Assistant Sessions Judge,**
**Cheyyar.**